எண்.5/7/3/7/பதிவாளர்/பால்வளம்/2018/103
புதுச்சேரி அரசு
கூட்டுறவுத்துறை (பால் வளம்)
வி.வி.பி. நகர், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009.
----

புதுச்சேரி, நாள். 20 .12.2024

சுற்றறிக்கை

பொருள்: கூட்டுறவு துறை - பால்வளம் - பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் - சங்க பணியாளர்கள் நியமன விதிகள் திருத்தம் செய்வது - தொடர்பாக.

பார்வை: கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் 28.07.1994 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.12/2/6/RCS/M/93/193.
---

புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் தங்கள் சங்கத்தில் பணியாளர்களின் பணிநியமனம் மற்றும் பதவி உயர்வுகளில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்கள் பார்வையில் கண்டுள்ள சுற்றறிக்கையில் கூறியுள்ளபடியும் மற்றும் அவர்கள் அவ்வப்போது வழங்கிவரும் வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகளை செயல்படுத்தாதது இவ்வலுவலக கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் பெரும்பாலான கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் கணக்குகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும் பாலின் தரத்தை பரிசோதிக்க பயன்படுத்தப்படும் பால் பரிசோதனை இயந்திரத்தை (Lacto Milk Analyzer) பயன்படுத்த, சங்க ஊழியர்களுக்கு தொழில்நுட்ப அறிவு தேவைப்படுகிறது. கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்கள் தங்களது கல்வி தகுதியை மேம்படுத்தாமல் சங்கத்தின் கணக்குகளை பராமரிப்பது மற்றும் சங்கத்தின் அன்றாட வேலைகளை கவனிப்பது தற்போதைய சூழலில் சிரமமான ஒன்றாக இருக்கிறது.

எனவே மேற்கூறியுள்ள குறைகளை சரிசெய்யவும், கணினிமயமாக்கப்பட்ட சூழலில் சங்கத்தின் கணக்குகளை பராமரிக்கவும், அதன் தரத்தை மேம்படுத்தவும், கூட்டுறவின் அடிப்படை கொள்கைகளையும் அதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து சங்கம் மற்றும் சங்க உறுப்பினர்கள் நலம் கருதி செயல்படவும், மற்றும் சங்க பணியாளர்கள் பணிநியமனங்களை நெறிபடுத்தவும் புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களின் பணியாளர்கள் பணிநியமன துணை விதிகளில் (Schedule 'A' to Clause 4 of the Subsidiary Regulations Governing the Service Conditions to the Employees of the Primary Co-operative Milk Producers' Societies) சங்க செயலாளர், பால் பரிசோதகர், பால் அளவையாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களுக்கு பணி அமர்த்துதல் மற்றும் பதவி உயர்வுக்கான தகுதிகள் கீழே கையொப்பம் இட்டவரால் மாற்றி நிர்ணயிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

| Sl. No. | Name of the Post | Method of Recruitment | Qualification and experience | |
|---|---|---|---|---|
| | | | Direct Recruitment | Promotion |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | Secretary | By Promotion / Direct Recruitment | **Essential Qualification**<br>(i) A pass in H.Sc., (12th class) or equivalent from a recognized Board or University.<br><br>(ii) A pass in certificate course in Co-operative Management.<br><br>(iii) A pass in certificate course in computer application in the Pondicherry Institute of Co-operative Management<br><br>**Desirable Qualification**<br>(i) Reside in the jurisdiction of the concerned PCMPS* | **Essential Qualification**<br>(i) From among Testers who have completed not less than (5) Five years of continuous service in the grade.<br><br>(ii) A pass in SSLC (10th class) or equivalent from a recognized Board.<br><br>(iii) A pass in certificate course in Co-operative Management.<br><br>(i) A pass in certificate course in computer application in the Pondicherry Institute of Co-operative Management |

OFFICE OF THE REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES PUDUCHERRY

தொடர்ச்சி/-

| Sl. No. | Name of the Post | Method of Recruitment | Qualification and experience | |
|---|---|---|---|---|
| | | | Direct Recruitment | Promotion |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 2 | Milk Tester | By Promotion / Direct Recruitment | <u>Essential Qualification</u><br>(i) A pass in SSLC (10th class)<br>(ii) A pass in certificate course in Co-operative Management<br>(or)<br>A pass in certificate course in computer application in the Pondicherry Institute of Co-operative Management<br><u>Desirable Qualification</u><br>(i) Reside in the jurisdiction of the concerned PCMPS* | <u>Essential Qualification</u><br>(i) From among Milk Measurers, who have completed not less than 5 (Five) years of continuous service in the grade.<br>(ii) A pass in certificate course in Co-operative Management<br>(or)<br>A pass in certificate course in computer application in the Pondicherry Institute of Co-operative Management |
| 3. | Milk Measurer | By Promotion Direct recruitment | <u>Essential Qualification</u><br>(i) A pass in SSLC (10th class)<br>(ii) A pass in certificate course in computer application in the Pondicherry Institute of Co-operative Management<br><u>Desirable Qualification</u><br>(i) Reside in the jurisdiction of the concerned PCMPS* | <u>Essential Qualification</u><br>(i) From among Helpers, who have completed not less than 5 (Five) years of continuous service in the grade.<br>A pass in certificate course in computer application in the Pondicherry Institute of Co-operative Management |
| 4 | Helper | By Direct Recruitment | <u>Essential Qualification</u><br>(i) A pass in SSLC (10th class)<br><u>Desirable Qualification</u><br>(i) Reside in the jurisdiction of the concerned PCMPS* | Does not arise. |

PCMPS*- Primary Co-operative Milk Producers' Society

மேல் அட்டவணையில் கூறியவாறு திருத்தப்பட்ட பணிநியமன துணை விதிகளை கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் நிர்வாகக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி பணிநியமன துணைவிதி ஒப்புதுதலுக்கு கீழே கையொப்பம் இட்டவரின் அனுமதிக்கு 31.01.2025 ஆம் தேதிக்குள் அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் தங்கள் சங்கத்திற்கு பதிவு செய்யப்பட்ட பணியாளர்கள் நியமன துணைவிதிகள் இல்லாத பட்சத்தில் புதுச்சேரி அரசு, கூட்டுறவுத்துறை https://cooperative.py.gov.in என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து அதனை நிர்வாக குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி கீழே கையொப்பம் இட்டவரின் அனுமதிக்கு 31.01.2025 தேதிக்குள் அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், புதியதாக மாற்றப்பட்ட பணியாளர்கள் நியமன விதிகளின் படி கல்வி மற்றும் கணினி தகுதிகள் இல்லாமல் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களில் தற்போது பணிபுரியும் ஊழியர்கள் மேலே குறிப்பிட்டுள்ள கல்வி தகுதிகளை இரண்டு ஆண்டிற்குள் முடிக்க அனுமதிக்கப்படுகிறார்கள், தவறும் பட்சத்தில் அவர்களுக்கு ஊதிய உயர்வு மறுக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது மற்றும் <u>எந்த ஒரு பணியாளரையும் உரிய விதிகளை பின்பற்றாமலும், கீழே கையொப்பமிட்டவரின் முன் அனுமதி பெறாமலும் பணி நியமனம் செய்யக்கூடாது என்றும் அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு விதிகளை பின்பற்றாமல் செய்யப்படும் நியமனங்கள் செல்லாது என்று பணி நீக்கம் செய்யப்படும். மேலும் பணி நியமனம் செய்த நிர்வாக குழு / நிர்வாகி மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.</u>

12/15

(ச. யஷ்வந்தய்யா)
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்

பெறுநர்
தலைவர்/நிர்வாகி,
------------------------------------------ கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம், (அ) எண்.பி.
------------------------------------------
புதுச்சேரி .

நகல்
1. பால் அபிவிருத்தி அதிகாரி, கூட்டுறவு துறை, புதுச்சேரி.
2. துணைப்பதிவாளர், (திட்டம் / கடன் / வீட்டு வசதி / நுகர்வோர் / கைத்தறி / தணிக்கை) கூட்டுறவு துறை, புதுச்சேரி.
3. துணை பதிவாளர், காரைக்கால்.
4. கூட்டுறவு அதிகாரி, யானம்.
5. மேலாண் இயக்குனர், புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், புதுச்சேரி.
6. மேலாண் இயக்குனர், காரைக்கால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், காரைக்கால்.
7. The Web Editor. 8. கோப்பு 2024.